**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்</u>**

**<u>அசல் வழக்கு எண். 43/ *2021 c/w* 44/2021</u>**

2023- ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 17 – ஆம் நாள் செவ்வாய்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய PW1 - வது நபரின் வாக்குமூலம் ( 1969- ஆம் ஆண்டின் 54 வது விதியில் 9- வது பிரிவின் ஏற்பாட்டின் படி ) திரு.கோ.லோகநாதன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சின்னபொன்னு | தொழில் | : | விவசாயம் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | ஒப்பிலாமணி | வட்டம் | : | குன்னம் |
| கிராமம் | : | நன்னை | சமயம் | : | – |
| சாதி | : | – | வயது | : | 51 /2023 |

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :-

1. எனது கணவர் வெளிநாட்டில் இருப்பதால் குடும்ப மேலாளர் என்ற முறையில் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன்என்றால் சரிதான். 2–ம் வாதி லெட்சுமி என்பவர் எனது கணவரின் தம்பி மனைவி ஆவார் . அவருக்கும் சேர்த்துதான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். இரண்டு தாவா சொத்துக்களுக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான் . அதில் 'A' அட்டவணை சொத்து என்னால் வாங்கப்பட்டது என்றால் சரிதான் . மேற்படி 'A' அட்டவணை சொத்தை 02.02.2005 ம் தேதி நானும் எனது கணவரும் சேர்ந்து சரோஜா என்பவரிடம் கிரயம் வாங்கினோம் என்றால் சரிதான்அந்த ஆவணம் **வா.சா.ஆ 1** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான் . அதே தேதியில் 2–ம் வாதி லெட்சுமி என்பவரும் சரோஜா என்பவரிடம் அதே 'A' அட்டவணை சொத்தில் ஒரு பகுதியை கிரயம் பெற்றார் என்றால் சரிதான். அந்த ஆவணம் **வா.சா.ஆ 2** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. நாங்கள் கிரயம் பெற்ற 'A' அட்டவணை சொத்தை நாங்கள் தனித்தனியாக தான் அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரிதான்.

B அட்டவணை சொத்து அரசு புறம்போக்கு சொத்து என்றால் சரிதான். 'A' அட்டவணை சொத்தும் B அட்டவணை சொத்தும் தனித்தனியாக உள்ளதா என்றால் இல்லை ஒன்றாக தான் உள்ளது . வா.சா.ஆ 3 தாவா சொத்திற்கான புல வரைபடம் என்றால் சரிதான். அதில் அரசு புறம்போக்கு சர்வே எண். 165/18 தனியாக பிரித்து காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அரசு புறம்போக்கு தனியாக உள்ளது என்றாலும் நான் வழக்கிற்காக ஒன்றாக உள்ளது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

3. 02.02.2005 ம் தேதி 2 கிரய பத்திரங்கள் மட்டும் தான் போட்டோமா என்றால் தரிசு நிலத்திற்கும் சேர்த்து சரோஜா எங்களுக்கு எழுதி கொடுத்தார். சரோஜா தரிசு நிலம் தொடர்பாக எழுதி கொடுத்த ஆவணத்தை வழக்கு தாக்கல் செய்யும்போதே நீதிமன்றத்தில் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன் . பிரதிவாதி ராமசாமி தாக்கல் செய்து வழக்கையும் நான் கட்சி செய்து நடத்தி வருகிறேன் என்றாலும் மேற்படி இரண்டு வழக்குகளையும் சேர்த்து ஒரே வழக்கு விசாரணையாக நடைபெற்று வருகிற விபரம் தெரியுமா என்றால் தெரியும்.

4. நான் வழக்கு தாக்கல் செய்தபோது போட்ட வழக்குரையிலோ அல்லது பிரதிவாதி வழக்கில் நான் தாக்கல் செய்த எதிர் வழக்குரையிலோ தரிசு நிலம் தொடர்பாக சரோஜா எழுதி கொடுத்த ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் வழக்கு தாக்கல் செய்தபோதே மேற்படி ஆவணத்தை கொடுத்துவிட்டேன். அரசு தரிசு புறம்போக்கை எனக்கு அடமானம் கொடுக்க வேண்டும் என்று நான் R.D.O இடம் மனு கொடுத்தேன் என்றால் சரிதான். சர்வே எண். 165/11, 165/12, 165/13, ஆகியவை பிரதிவாதிகள் இடம் என்றால் சரிதான்.

5. நான் R.D.O இடம் கொடுத்த மனுவிற்கு பிரதிவாதி தனது இடத்திற்கு செல்ல பாதை கிடையாது என கட்சி செய்தார் என்றால் சரிதான் . நான் கொடுத்த மனுவின்பேரில் ஊரில் வந்து விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. மேற்படி மனுவை தள்ளுபடி செய்து விட்டார்கள் . மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்ட விபரம் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே

எனக்கு தெரியும் என்றால் சரிதான் . என்ன காரணத்திற்காக எனது மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு எழுத படிக்க தெரியாது. நான் கொடுத்த மனு சர்வே எண். 165/18 என்பது தரிசு என கிராம கணக்கில் உள்ளது என்றும் மேற்படி நிலத்தை அடமானம் கொடுத்தால் சர்வே எண் . 165/11 பி, 165/13, 165/12 ஏ மற்றும் 165/11 ஏ ஆகிய நிலங்களுக்கு பாதை வசதி இல்லாத நிலை ஏற்படும் என்ற காரணத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

6. மேற்படி உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு சென்றோமா என்றால் மேல்முறையீடு செய்தோம் . மேற்கண்ட உத்தரவில் சொல்லி இருந்த காரணங்களை ரத்து செய்ய கோரிதான் நான் மேல்முறையீடு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான் மேல்முறையீடு தாக்கல் செய்த பிறகும் வருவாய் துறையினர் இடத்திற்கு வரவில்லை நீதிமன்றத்தில் சென்று பார்த்துக்கொள்ளுமாறு சொல்லிவிட்டார்கள் . எங்களை விசாரித்துதான் மேற்படி முடிவை சொன்னார்கள் . நான் R.D.O போட்ட உத்தரவை தெரிந்துகொண்டுதான் மேல்முறையீடு செய்தேன் என்றாலும் தற்போது உத்தரவு பற்றி தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

7. தாவா பி அட்டவணை சொத்திற்கும் நாங்கள் தண்ட தீர்வை செலுத்தியுள்ளோம். அரசு புறம்போக்கு நிலத்திற்குதான் தண்ட தீர்வை செலுத்தப்படும் என்றால் சரிதான் . மேற்படி சொத்து **சர்வே எண். 165/18** எனது கிரய முன்னவர்களான ராசு படையாச்சிக்கோ சரோஜாவிற்கோ தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டது அல்ல என்றால் சரிதான் . **பட்டா எண். 197** என்பது **ஏ** அட்டவணை சொத்திற்கு மட்டுமே பாத்தியப்பட்டது **பி** அட்டவணை சொத்திற்கு பாத்தியப்பட்டது அல்ல என்றால் சரிதான் . நான் தாவா வழக்கை தாக்கல் செய்யும்போது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மட்டுமே தாக்கல் செய்தேன் என்றால் சரிதான் . அந்த சமயத்தில் R.D.O உத்தரவை ரத்து செய்யக்கோரி பரிகாரம் கேட்கவில்லை என்றால் வழக்கு தாக்கல் செய்த சமயத்திலேயே நான் அந்த பரிகாரத்தை கேட்டுள்ளேன்.

DMK KUMAR

8. நான் வழக்கு தாக்கல் செய்யும்போது உத்தரவை ரத்து செய்ய சொல்லி பரிகாரம் கோரவில்லை என்று சொன்னால் சரியல்ல . எனது கணவர் தற்போது வெளிநாட்டில் இருந்து வந்துவிட்டார் . குடும்ப மேலாளர் என்ற முறையில் வழக்கை நடத்த பவர் பத்திரம் எதுவும் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் தாவா **பி** அட்டவணை சொத்தில் பாதை மற்றும் வண்டி பாதை உள்ளதாகவும் மேற்படி வண்டிபாதை வழியாக 1,2 பிரதிவாதிகள் தங்கள் நிலங்களுக்கு சென்று வருவதாகவும் தாவா **பி** அட்டவணை சொத்தில் உள்ள பாதை தவிர பிரதிவாதி நிலங்களுக்கு சென்று வர வேறு பாதை இல்லை என்றும் இன்னும் பல மோசடியான காரணங்களை கூறி ஆட்சேபனை செய்ததால் 4-ம் பிரதிவாதி எந்தவித விசாரணையும் செய்யாமல் தல பார்வை செய்யாமலும் நான் கொடுத்த மனுவை தள்ளுபடி செய்து விட்டார் எனக்குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

9. நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் பிரதிவாதிகள் எனது கிரய முன்னவர்களிடம் ஏ அட்டவணை சொத்தை கிரயம் கேட்டு அவர்கள் கொடுக்க மறுத்து எனக்கு கிரயம் செய்து கொடுத்ததால் என்னிடம் வந்து தகராறு செய்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான் . அவ்வாறு பிரதிவாதிகள் எனது கிரய முன்னவர்களிடம் எந்த தேதியில் கிரயம் கேட்டார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. அவ்வாறு கிரயம் கேட்டிருந்தால் தேதி தெரிந்திருக்கும் அவ்வாறு கிரயம் எதுவும் கேட்காததால் தான் நான் தேதி ஞாபகம் இல்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

10. வா.சா.ஆ 5 மற்றும் வா .சா.ஆ 6 ஆக என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள புறம்போக்கு அனுபோக ஒப்படை பத்திரம் யாரால் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டது என்றால் ராசு படையாச்சி மற்றும் சரோஜா ஆகியோர்களால் எங்களுக்கு ஏற்படுத்திகொடுக்கப்பட்டது . புறம்போக்கு இடத்தை ஒப்படைப்பதற்கு ராசு படையாச்சிக்கோ சரோஜாவிற்கோ எந்தவிதமான உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு

உரிமை இல்லாத சொத்து தொடர்பாக பதிவு செய்யப்படாத பத்திரம் ஏற்படுத்தி கொண்டிருப்பது ஏற்புடையது அல்ல என்று சொன்னால் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ 5 மற்றும் வா.சா.ஆ 6 வழக்கிற்காக எங்களால் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல . மேற்படி ஆவணம் எங்களால் போலியாக ஏற்படுத்தப்பட்டதால்தான் மேற்படி ஆவணங்களை R.D.O விசாரணையின்போதோ அல்லது வழக்கு தாக்கல் செய்யும்போதோ கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல . தாவா பி அட்டவணை சொத்து அரசு புறம்போக்கு R.D.O முறையாக விசாரித்துதான் உத்தரவு பிறப்பித்துள்ளார் என்பதால் தான் நான் மேற்படி உத்தரவு தொடர்பாக உரிய முறையில் மேல்முறையீடு செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

11. சர்வே எண் . 165/18 ல் தற்போது வண்டி பாதை மற்றும் நடைபாதையாக பயன்படுத்தப்பட்டு வருகிறதா என்றால் இல்லை . பிரதிவாதி நிலங்களுக்கு செல்வதற்கு **பி** அட்டவணை சொத்தை தவிர வேறு பாதை இல்லை என்று சொன்னால் சரியல்ல . பிரதிவாதிகளுக்கு பி அட்டவணை சொத்தை தவிர வேறு பாதை உள்ளது என்ற விபரத்தை நான் எனது வழக்குரையிலோ அல்லது மற்றொரு வழக்கில் என்னால் தாக்கல் செய்யப்பட்ட எதிர் வழக்குரையிலோ குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. ( பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதிற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMC KUNNAM